காஞ்சிபுரத்தைப் பற்றிய 'காஞ்சிபுராணம்' இரு பகுதிகளாக இயற்றப்பட்டது. இதன் முதல் பகுதியை சிவஞான முனிவர் இயற்றினார். அவர் மறைவுக்குப்பின், விடுபட்ட பிற்பகுதியை (இரண்டாம் காண்டம்) அவரது மாணவரான கச்சியப்ப முனிவர் பாடி முடித்தார்.

தொண்டைமான் இளந்திரையன் சங்க காலத்தில் காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு தொண்டை நாட்டை ஆண்ட புகழ்பெற்ற மன்னர் ஆவார். இவரது சிறப்புகளைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் 'பெரும்பாணாற்றுப்படை' நூலில் பாடியுள்ளார்.

நியோமேக்ஸ் நிறுவன பங்குதாரர் காருடன் கடத்தல்?

4 தனிப்படை அமைத்து தேடுதல் வேட்டை

■ நாவலூர்

சென்னை ஓ.எம்.ஆர். சாலையில் காரில் இருந்த நிதி நிறுவன முன்னாள் பங்குதாரர் மர்ம நபர்களால் காருடன் கடத்தப்பட்டதாக கூறப்படுகிறது. அவரை மீட்க தாழம்பூர் போலீஸார் 4 தனிப்படைகளை அமைத்து தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளனர்.

போலீஸ் தரப்பில் கூறப்பட்டதாவது:

கடந்த 2016-ம் ஆண்டு அதிமுக ஆட்சிக் காலத்தில் செயல்பட்டதாக கூறப்படும் நியோமேக்ஸ் நிறுவனம், பொதுமக்களிடம் முதலீடு பெற்று ரியல் எஸ்டேட் தொழிலில் முதலீடு செய்து, 3 மடங்கு லாபம் வழங்குவதாக உறுதியளித்ததாக கூறப்படுகிறது. தமிழகம் முழுவதும் ஆயிரக்கணக்கான முதலீட்டாளர்களிடம் சுமார் ரூ.4,000 கோடி வரை மோசடி நடைபெற்றதாக புகார்கள் எழுந்தன. பின்னர் நிறுவனம் செயலிழந்த நிலையில், அதன் நிர்வாகிகள் மற்றும் தொடர்புடைய பலர் கைது செய்யப்பட்டு, வழக்கு நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது.

இந்த நிறுவனத்தின் முன்னாள் பங்குதாரர்களில் ஒருவரான சென்னை மேடவாக்கத்தைச் சேர்ந்த சார்லஸ் (56), நேற்று முன்தினம் தனது காரில் நாவலூர் பகுதிக்கு சென்றிருந்தார். அவருடன், பெருங்குடியைச் சேர்ந்த கார் ஓட்டுநர் ஷியாம் (30) இருந்தார்.

நாவலூரில் ஓ.எம்.ஆர். சாலையோரத்தில் காரை நிறுத்திய சார்லஸ், எதிரே உள்ள வணிக வளாகத்தில் செயல்படும் மதுபானக் கடையில் இருந்து மது வாங்கி வருமாறு ஓட்டுநரிடம் கூறியுள்ளார். இதையடுத்து ஷியாம் அங்கிருந்து சென்று 15 நிமிடங்களுக்குப் பிறகு திரும்பி வந்தபோது, கார் மற்றும் அதில் இருந்த சார்லஸ் இருவரும் மாயமாகியிருந்தனர். அவரது செல்போனை தொடர்பு கொண்டபோது அது அணைத்து வைக்கப்பட்டிருந்தது. இதனால் அதிர்ச்சியடைந்த ஷியாம், உடனடியாக காவல் கட்டுப்பாட்டு அறைக்கு தகவல் தெரிவித்தார்.

தகவலின் பேரில் தாழம்பூர் போலீஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று விசாரணை மேற்கொண்டனர். அப்பகுதியில் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்பு கேமராக்களை ஆய்வு செய்தபோது, மற்றொரு காரில் வந்த நான்கு பேர், சார்லசுடன் சில நிமிடங்கள் பேசிய பின்னர், அவரை அவரது காருடன் அழைத்துச் செல்வது பதிவாகியிருந்தது.

இதையடுத்து, இது திட்டமிட்ட கடத்தலாக இருக்கலாம் என்ற கோணத்தில் போலீஸார் விசாரணையை தீவிரப்படுத்தினர். கண்காணிப்பு கேமராக்கள் மற்றும் தொழில்நுட்ப ஆதாரங்களின் அடிப்படையில், சம்பந்தப்பட்ட கார் திருச்சி சுங்கச்சாவடியை கடந்து சென்றது கண்டறியப்பட்டுள்ளது.

முதற்கட்ட விசாரணையில், நியோமேக்ஸ் நிறுவனத்தில் முதலீடு செய்து பாதிக்கப்பட்ட சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த சில முதலீட்டாளர்கள் ஒன்றிணைந்து இந்த சம்பவத்தில் ஈடுபட்டிருக்கலாம் என்ற சந்தேகம் போலீஸாருக்கு எழுந்துள்ளது. இருப்பினும், அனைத்து கோணங்களிலும் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சார்லஸை பத்திரமாக மீட்கவும், கடத்தலில் ஈடுபட்டவர்களை கைது செய்யவும், தாழம்பூர் காவல் நிலைய போலீஸார் 4 தனிப்படை அமைத்து, சென்னை, திருச்சி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த சம்பவம் சென்னை புறநகர் பகுதிகளில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மீண்டும் டாஸ்மாக் திறக்க முயற்சி? மறைமலைநகரில் மக்கள் ஆர்ப்பாட்டம்

■ மறைமலைநகர்

செங்கல்பட்டு மாவட்டம், மறைமலைநகர் நகராட்சிக்கு உட்பட்ட பாவேந்தர் சாலையில் ஏற்கெனவே மூடப்பட்ட அரசு டாஸ்மாக் கடையை மீண்டும் திறக்க அதிகாரிகள் முயற்சி மேற்கொள்வதாக வெளியான தகவலைத் தொடர்ந்து, அப்பகுதி மக்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அவர்களின் கோரிக்கையை ஏற்று தமிழக அரசு அந்த மதுபானக் கடையை மூடியது. இதையடுத்து பள்ளி, கல்லூரி மாணவர்கள், பெண்கள் மற்றும் அப்பகுதி குடியிருப்புவாசிகள் நிம்மதி அடைந்திருந்தனர்.

இந்நிலையில், மூடப்பட்ட டாஸ்மாக் கடையை மீண்டும் அதே இடத்தில் திறப்பதற்கான நடவடிக்கைகள் நடைபெறுவதாக தகவல் பரவியது. இதனால் ஏராளமானோர் அங்கு திரண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதுகுறித்து தகவலறிந்த மறைமலைநகர் போலீஸார் சம்பவ இடத்துக்கு வந்து போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது, ஏற்கெனவே போராட்டத்தின் மூலம் மூடப்பட்ட கடையை மீண்டும் திறக்க அனுமதிக்க மாட்டோம் என்றனர்.

இதுகுறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பேசி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என போலீஸார் உறுதியளித்ததைத் தொடர்ந்து, போராட்டம் கைவிடப்பட்டது.

போலீஸாரை தாக்கிய ரவுடி காலில் சுட்டுப் பிடிப்பு

தலைமை காவலருக்கு வெட்டு; மேலும் ஒருவருக்கு வலை

■ வண்டலூர்

வண்டலூர் ஓட்டேரி காவல் நிலையத்தின் ஏ+ சரித்திரப் பதிவேடு குற்றவாளி செல்வகுமார் (33), கிளாம்பாக்கம் காவல் நிலைய ஏ+ சரித்திரப் பதிவேடு குற்றவாளி கனகராஜ் (33) ஆகியோர், கூட்டாளியுடன் படப்பை அருகே கரசங்கல் துண்டல் கழனி பகுதியில் பதுங்கியிருப்பதாக போலீஸாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது.

செல்வகுமார், கனகராஜ்

இதையடுத்து, ஓட்டேரி காவல் நிலைய உதவி ஆய்வாளர் தலைமையிலான தனிப்படையினர் அதிகாலை அங்கு சென்று சுற்றிவளைத்தனர். அப்போது ரவுடிகள் அரிவாளுடன் தாக்க முயன்றதாக கூறப்படுகிறது. இதில், தலைமைக் காவலர் ஆனந்தன் (45) காயமடைந்தார்.

தற்காப்பு நடவடிக்கையாக உதவி ஆய்வாளர் சதீஸ்குமார் துப்பாக்கியால் சுட்டதில், செல்வகுமாரின் வலது காலில் குண்டு பாய்ந்தது. காயமடைந்த செல்வகுமாரை தாம்பரம் அரசு மருத்துவமனைக்கு போலீஸார் அனுப்பி வைத்தனர். மேலும் சம்பவ இடத்தில் இருந்த கனகராஜை போலீஸார் கைது செய்து அங்கிருந்த 21 கிலோ கஞ்சாவை பறிமுதல் செய்தனர்.

இதற்கிடையில், இந்த வழக்கில் தொடர்புடைய அகஸ்டின் என்பவர் தப்பியோடிய நிலையில், அவரை தேடி வருகின்றனர்.

கஞ்சா வழக்கு, ஆயுதங்களுடன் பதுங்கியது, போலீஸாரை தாக்க முயன்றது உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்து, போலீஸார் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

விபத்தில் தலைமைக் காவலர் உயிரிழப்பு

■ சோழிங்கநல்லூர்

செங்கல்பட்டு அண்ணா நகரைச் சேர்ந்த ஜெய்கணேஷ் தாம்பரம் உதவி காவல் ஆணையரின் வாகன ஓட்டுநராக பணியாற்றி வந்தார். நேற்று காலை தனது சொந்த ஊரிலிருந்து இருசக்கர வாகனத்தில் ஓஎம்ஆர் சாலை வழியாக சென்னை நோக்கி வந்தபோது, சோழிங்கநல்லூர் விவான்டா ஹோட்டல் எதிரே உள்ள யூ-டர்னில் திரும்பினார். அப்போது, அதே திசையில் வந்த கழிவுநீர் லாரி இருசக்கர வாகனத்தின் மீது மோதியதில் ஜெய்கணேஷ் சாலையில் தூக்கி வீசப்பட்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இதுகுறித்து, தகவலறிந்த பள்ளிக்கரணை போலீஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று விசாரணை மேற்கொண்டு அவரது உடலை உடற்கூறு ஆய்வுக்காக அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இந்த விபத்து தொடர்பாக போலீஸார் வழக்குப்பதிவு செய்து, கழிவுநீர் லாரி ஓட்டுநரிடம் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்து தமிழ் திசை

பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அஜப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.என்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித் தாளின்/ மேற்கொள்ள நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுபவர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமானதுவற்றைத் திருப்பி அனுப்ப இயலாது.

FEDBANK FINANCIAL SERVICES LIMITED

ஃபெட்பேங்க் பைனான்சியல் சர்வீஸ் லிமிடெட் **சுவாதீனம் அறிவிப்பு**

பதிவு அலுவலகம் : யூனிட் எண்.: 1101, 11வது தளம், சிக்னஸ், மனை எண்.71ஏ, போவாய், பாஸ்போலி, மும்பை-400087

2002 ஆம் ஆண்டு நிதிச் சொத்துக்களின் பாதுகாப்புமயமாக்கல் மற்றும் மறுகட்டமைப்பு மற்றும் பாதுகாப்பு நலனை அமல்படுத்துதல் சட்டத்தின் (2002-ன் 54) கீழ், **ஃபெட்பேங்க் பைனான்சியல் சர்வீஸ் லிமிடெட்** நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியான நான், பாதுகாப்பு நலன் (அமலாக்கம்) விதிகள் 2002-ன் விதி 3 உடன் படிக்கப்படும் பிரிவு 13(12)-ன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி கீழே குறிப்பிடப்பட்டுள்ள கோரிக்கை அறிவிப்பை வெளியிட்டுள்ளேன், அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை, அந்த அறிவிப்பு பெற்ற தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்துமாறு பின்வரும் கடன்தாரர்களை கேட்டுக்கொண்டேன். பின்வரும் கடன்தாரர்கள் தொகையைத் திருப்பிச் செலுத்தத் தவறியதால், பின்வரும் கடன்தாரர்களுக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் இதன்மூலம் அறிவிக்கப்படுவது என்னவென்றால், பாதுகாப்பு நலன் (அமலாக்கம்) விதிகள் 2002-ன் விதி 8 உடன் படிக்கப்படும் சட்டத்தின் பிரிவு 13-ன் துணைப்பிரிவு (4)-ன் கீழ் தமக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களை நான் சுவாதீனம் செய்துள்ளேன்.

LAN / கடன்தாரர்(கள்) / இணை-கடன்தாரர்(கள்) / ஜாமீன்தாரர்(கள்)

1 கடன் கணக்கு எண். FEDCHNLAP0521828 (1) SRI BALAJI CABLE NETWORK (கடன்தாரர்), (2) பழனி P (இணை-கடன்தாரர்), (3) உமாமகேஷ்வரி P (இணை-கடன்தாரர்) | கோரிக்கை அறிவிப்பு நாள் மற்றும் தொகை: 16.04.2026, ரூ.6482708/- (ரூபாய் அறுபத்தி நான்கு இலட்சத்து எண்பத்தி இரண்டாயிரத்து ஏழுநூற்றி எட்டு மட்டும்) 16.04.2026 அன்று, கடன் கணக்கு எண். FEDCHNLAP0521828 | சுவாதீனம் நாள் மற்றும் வகை: 26.06.2026 மற்றும் சிம்பொலிக் சுவாதீனம் | அடமான சொத்தின் விவரம் : மனை எண்.8 கொண்ட அடமான சொத்து மற்றும் அதனை சார்ந்த பகுதிகளும், ச.எண். 135/1, பட்டாவின்படி புதிய ச.எண். 135/9, அளவுகள் 2400 சதுர அடி பரப்பு, கதவு எண். 108, திரு நகர், லேஅவுட் DTCP ஒப்புதல் எண். PPD/LO No.86-98/74 87 வேப்பம்பட்டு கிராமம், திருவள்ளூர் தாலுகா, சென்னை - 602024, தமிழ்நாட்டில் அமைந்துள்ளது. எல்லைகள் : கிழக்கு : மனை எண்.7, மேற்கு : மனை எண்.9, வடக்கு : கிழக்கிலிருந்து மேற்கு 30 அடி பொது சாலை, தெற்கு : மனை எண்.2. அளவுகள் : கிழக்கிலிருந்து மேற்கு வடக்கு பக்கம் : 40 அடி, கிழக்கிலிருந்து மேற்கு தெற்கு பக்கம் : 40 அடி, வடக்கிலிருந்து தெற்கு கிழக்கு பக்கம் : 60 அடி, வடக்கிலிருந்து தெற்கு மேற்கு பக்கம் : 60 அடி. திருவள்ளூர் இணை 1 சார் பதிவு மாவட்டம் மற்றும் திருவள்ளூர் பதிவு மாவட்டத்திற்குட்பட்டது.

2 கடன் கணக்கு எண். FEDCHNLAP0488093 & FEDCHNLAP0499499 (1) K A C TRADERS (கடன்தாரர்), (2) ரமேஷ் C (இணை-கடன்தாரர்), (3) ராமச்சந்திரன் A (இணை-கடன்தாரர்) | கோரிக்கை அறிவிப்பு நாள் மற்றும் தொகை: 08.04.2026, ரூ.4604423/- (ரூபாய் நாற்பத்தி ஆறு இலட்சத்து நான்காயிரத்து நானூற்றி இருபத்தி மூன்று மட்டும்) மற்றும் ரூ.3145079/- (ரூபாய் மூப்பத்தி ஒரு இலட்சத்து நாற்பத்தி ஐந்தாயிரத்து எழுபத்தி ஒன்பது மட்டும்) 08.04.2026 அன்று, கடன் கணக்கு எண். FEDCHNLAP0488093 & FEDCHNLAP0499499 | சுவாதீனம் நாள் மற்றும் வகை: 23.06.2026 மற்றும் சிம்பொலிக் சுவாதீனம் | அடமான சொத்தின் விவரம் : அடமான சொத்து மற்றும் அதனை சார்ந்த பகுதிகளும், ச.எண். 51/2 புதிய ச.எண். 284/21, அளவுகள் 2174 சதுர அடி பரப்பு நிலம் மற்றும் 740 சதுர அடியில் 350 சதுர அடி பாதை மொத்தம் 2544 சதுர அடி, பிள்ளையார் கோவில் தெரு, காட்டுபாக்கம் கிராமம், பூந்தமல்லி தாலுகா, திருவள்ளூர் மாவட்டம், சென்னை - 600056, தமிழ்நாட்டில் அமைந்துள்ளது. எல்லைகள் : கிழக்கு - 4 அடி அகல பொது பாதை மற்றும் திரு. அண்ணாமலை நாயக்கர் அவர்களின் மனை, மேற்கு - திரு. பாலகிருஷ்ணன் @ பாலு21 அவர்களின் மனை மற்றும் வீடு, வடக்கு - திரு. கணேஷ் அவர்களின் மனை மற்றும் வீடு, தெற்கு - திரு. பரமசிவம் அவர்களின் மனை மற்றும் வீடு. அளவுகள் : கிழக்கிலிருந்து மேற்கு தெற்கு பக்கம் - 23 அடி 6 அங்குலம், வடக்கிலிருந்து தெற்கு கிழக்கு பக்கம் : 92 1/2 அடி, வடக்கிலிருந்து தெற்கு மேற்கு பக்கம் : 92 1/2 அடி, கிழக்கிலிருந்து மேற்கு வடக்கு பக்கம் : 23 அடி 6 அங்குலம். குன்றத்தூர் சார் பதிவு மாவட்டம் மற்றும் தென் சென்னை பதிவு மாவட்டத்திற்குட்பட்டது.

3 கடன் கணக்கு எண். FEDCHNLAP0516815 (1) S V ENTERPRISES (கடன்தாரர்), (2) செந்தில் குமார் S (இணை-கடன்தாரர்), (3) பவித்ரா M (இணை-கடன்தாரர்) | கோரிக்கை அறிவிப்பு நாள் மற்றும் தொகை: 08.04.2026, ரூ.8796576/- (ரூபாய் எண்பத்தி ஏழு இலட்சத்து தொண்ணூற்றி ஆறாயிரத்து ஐநூற்றி எழுபத்தி ஆறு மட்டும்) 08.04.2026 அன்று, கடன் கணக்கு எண். FEDCHNLAP0516815 | சுவாதீனம் நாள் மற்றும் வகை: 23.06.2026 மற்றும் சிம்பொலிக் சுவாதீனம் | அடமான சொத்தின் விவரம் : அடமான சொத்து மற்றும் அதனை சார்ந்த பகுதிகளும், பழைய எண். 169, புதிய எண்.36, செம்பாக்கம் கிராமம், மாரியம்மன் கோவில் தெரு, அளவுகள் 1355 சதுர அடி பரப்பு (கிழக்கு பகுதி) 2999 சதுர அடியில் நிலம் மற்றும் அத்துடன் கட்டிடம் பில்டப் ஏரியா தரை தளம் 800 சதுர அடி மற்றும் முதல் தளம் 800 சதுர அடி மொத்த பில்டப் ஏரியா 1600 சதுர அடி, ஆர்.சி.சி. மேற்கூரை மேல்மாடி வீடு மற்றும் அனைத்து உதிரிபாகங்கள் மற்றும் பிட்டிங்ஸ் T.N.E.B. மின்சாரம் இணைப்பு மற்றும் வைப்பு மற்றும் மற்ற வசதிகள் மற்றும் 6 அடி பொது பாதை, கிராமநத்தம் ச.எண்கள் 140/2, 140/3, மனைவாரி தோராய பட்டா எண். 179 பட்டாவின்படி பழைய சர்வே எண். 140/2 பகுதி, கிராமநத்தம் புதிய சர்வே எண். 140-2/1, செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் தாலுகா, தாம்பரம் மாநகராட்சி எல்லைக்குட்பட்டது. எல்லைகள்: கிழக்கு : திரு. R. சுதாகர் அவர்களின் நிலம், மேற்கு : திரு. A ராதாகிருஷ்ணன் அவர்களின் மேற்கு பக்கம் நிலம் (மனை எண்.A), வடக்கு : காலி நிலம், தெற்கு : 10 அடி பொது பாதை. அளவுகள் : கிழக்கிலிருந்து மேற்கு வடக்கு பக்கம் : 37'0" அடி, கிழக்கிலிருந்து மேற்கு தெற்கு பக்கம்: 36'3" அடி, வடக்கிலிருந்து தெற்கு கிழக்கு பக்கம் : 37'0" அடி, வடக்கிலிருந்து தெற்கு மேற்கு பக்கம் : 37'0" அடி. அனைத்து அளவுகள் 1355 சதுர அடி பரப்பு மற்றும் சொத்தானது சேலையூர் சார் பதிவு மாவட்டம் மற்றும் தென் சென்னை பதிவு மாவட்டத்திற்குட்பட்டது.

குறிப்பாகக் கடன்தாரர்களுக்கும், பொதுவாகப் பொதுமக்களுக்கும் இந்தச் சொத்துடன் எந்தவிதமான பரிவர்த்தனைகளிலும் ஈடுபட வேண்டாம் என இதன் மூலம் எச்சரிக்கப்படுகிறார்கள், இந்த சொத்துடன் செய்யப்படும் எந்தவொரு பரிவர்த்தனையும், மேலே குறிப்பிடப்பட்ட தொகை மற்றும் வட்டியுடன் கூடிய ஃபெட்பேங்க் பைனான்சியல் சர்வீஸ் லிமிடெட்-ன் அடமானத்திற்கு உட்பட்டதாக இருக்கும். பாதுகாக்கப்பட்ட சொத்துக்களை மீட்டுக்கொள்வதற்கு உள்ள கால அவகாசம் தொடர்பாக, சட்டத்தின் பிரிவு 13-ன் துணைப்பிரிவு (8)-ல் உள்ள விதிகளின்படி கடன்தாரர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

இடம் : திருவள்ளூர், சென்னை **sd/- (அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி)**
நாள் : 26.06.2026, 23.06.2026 **ஃபெட்பேங்க் பைனான்சியல் சர்வீஸ் லிமிடெட்**

வரி விளம்பரங்கள்

சுய செய்தி

பெயர்மாற்றம்

I, Amith Kumar Sharma ,S/ O; Lakshmi Narayan Sharma R/O: Tower No.4, Flat No 094, DLF Garden City, Semmancherry, Sholinganallur, Kancheepuram- 600119. Have changed my name as Amith Kumar Lakshmi Narayan Sharma.

I, Harshil Sharma Amith Kumar ,S/ O; Amith Kumar Lakshmi Narayan Sharma R/O: Tower No.4, Flat No 094, DLF Garden City, Semmancherry, Sholinganallur, Kancheepuram-6000119 Have changed my name as Harshil Sharma

I, Sanjay Menon Narayanan, S/ O; Menon Narayan Ayyappan, R/O: Flat No 110, Bay View Apartments, NO.05 Raja Rangaswamy Avenue, Valimiki Nagar, Thiruvanmiyur, Chennai-600041. Have changed my name as Sanjay Menon.

U GRO CAPITAL

U GRO கேப்பிட்டல் லிமிடெட்

பதிவு அலுவலகம் முகவரி : B-17, நான்காவது தளம், ஆர்ட் கில்ட் ஹவுஸ், பீனிக்ஸ் மார்க்கெட் சிட்டி, கூர்லா (மேற்கு), மும்பை - 400070.

கோரிக்கை அறிவிப்பு

நிதிச் சொத்துக்களின் பாதுகாப்பு மற்றும் மறுசீரமைப்பு மற்றும் பாதுகாப்பு வட்டி அமலாக்கச் சட்டம் 2002 ("சட்டம்") மற்றும் விதிகள் மற்றும் பாதுகாப்பு வட்டி (அமலாக்கம்) விதிகள், 2002 ("விதிகள்")-ன்கீழ்

கீழே கையொப்பமிட்டுள்ள **UGRO கேப்பிட்டல் லிமிடெட்**-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியானவர், சட்டத்தின் பிரிவு 13(2) ன்கீழ் பிரிவு 3-ன்கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, சட்டத்தின் பிரிவு 13(2)-ன்கீழ் கோரிக்கை அறிவிப்பு அறிவிக்கப்பட்டது. பின்வரும் கடன்தாரர்(கள்) குறிப்பிட்ட தொகையைச் செலுத்த அந்தந்த கோரிக்கை அறிவிப்பில், கீழே கொடுக்கப்பட்டுள்ள விவரங்களின்படி, அந்தந்த அறிவிப்பு தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் செலுத்த வேண்டும் என்று அழைப்பு விடுத்தார். கடன்தாரர்கள் கோரிக்கை அறிவிப்பை(களை) வாங்குவதை தவிர்க்கிறார்கள் என்று கீழே கையொப்பமிட்டவர் நியாயமாக நம்புகிறார், எனவே கோரிக்கை அறிவிப்பின் சேவை விதிகளின்படி இணைத்து செய்தித்தாளில் வெளியிடுவதன் மூலம் செயல்படுத்தப்படுகிறது.

கோரிக்கை அறிவிப்பின் உள்ளடக்கங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

வ.எண்.	கடன்தாரர்(கள்) பெயர்	கோரிக்கை அறிவிப்பு நாள் மற்றும் தொகை
1	1) V.VEDHAGIRI MUDHALIYAR TRADERS 2) தணிகாசலம் லோகேஷ், 3) குணசுந்தரி தணிகாசலம், 4) அபிராமி அபிராமி, 5) வேதகிரி தணிகாசலம், 6) தணிகாசலம் ஜெயபாலன், 7) தணிகாசலம் பிரேமா, 8) உமாராணி உமாராணி, LAN - HCFKNCSEC00001027494	கோரிக்கை அறிவிப்பு நாள்: 11.06.2026 அறிவிப்பு தொகை: ரூ.25,64,298.00/- (ரூபாய் இருபத்தி ஐந்து இலட்சத்து அறுபத்தி நான்காயிரத்து இருநூற்றி தொண்ணூற்றி எட்டு மட்டும்) 05.06.2026 தேதியில்

பாதுகாப்பு சொத்து(கள்) விவரம்:- அட்டவணை சொத்து, காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் பதிவு மாவட்டம், வாலாஜாபாத் சார் பதிவாளர் அலுவலகம், காஞ்சிபுரம் தாலுகா, எண். 78, ஏகனம்பேட்டை கிராமம், கிராமம் நத்தம் சர்வே எண். 28/1பி, புதிய கிராமம் நத்தம் சர்வே எண். 38/5, ரோடு தெரு, வீடு மற்றும் சைட் சொத்து, அளவுகள் கிழக்கிலிருந்து மேற்கு 34 அடி (தெற்கு பக்கம்), 32 அடி- (வடக்கு பக்கம்), மற்றும் வடக்கிலிருந்து தெற்கு 42 அடி- (கிழக்கு பக்கம்), 42 அடி- (மேற்கு பக்கம்), மொத்தம் 1386 சதுர மற்றும் ஆர்.சி.சி. மேற்கூரை கட்டிடம் உட்பட அனைத்து உதிரிபாகங்கள் மற்றும் வடக்கு பக்கம், மற்றொரு பகுதி, அளவுகள் கிழக்கிலிருந்து மேற்கு 16 அடி, மற்றும் வடக்கிலிருந்து தெற்கு 55 அடி- (மேற்கு பக்கம்), 75 அடி-(கிழக்கு பக்கம்), மொத்தம் 1040 சதுர அடி, மொத்த மனை அளவுகள் 1386 + 1040 = 2426 சதுர அடி, கதவு எண். 93ஏ, பழைய எண். 184ஏ. **எல்லைகள் :** வடக்கே தெரு மற்றும் V. சண்முகம் அவர்களின் பகுதி, தெற்கே கிராமம் பொது பாதை, கிழக்கே நத்தம் சர்வே எண். 38/4-ல் கட்டிடம் மற்றும் திம்மையன்பேட்டை செல்லும் வழி மற்றும் மேற்கே வைத்தியலிங்கம் அவர்களின் கடை மற்றும் பின்புறம் சைட்.

4	1) VS ENTERPRISES 2) வினோத் பாபு, 3) சுமதி LAN – UGKNCMS0000051331, UGKNCMS0000037972	கோரிக்கை அறிவிப்பு நாள்: 19.06.2026 அறிவிப்பு தொகை: ரூ.69,25,092.00/- (ரூபாய் அறுபத்தி ஒன்பது இலட்சத்து இருபத்தி ஐந்தாயிரத்து தொண்ணூற்றி இரண்டு மட்டும்) 12.06.2026 தேதியில்

பாதுகாப்பு சொத்து(கள்) விவரம்:- கடன் அளித்தவரிடம் அடமானம் வைத்த சொத்து/சொத்துக்கள் விவரம்: வீடு மற்றும் வீடு சைட் சொத்து மற்றும் அதனை சார்ந்த அனைத்து பகுதிகளும், பரப்பளவு 2834 சதுர அடி, பழைய சர்வே எண். 366/1ஏ, பட்டா எண். 2339-ன்படி புதிய சர்வே எண். 366/1ஏ2-க்குட்பட்ட அகத்தியர் தெரு, பழைய எண். 135 மற்றும் புதிய எண். 99 மாதூர் கிராமம், ஸ்ரீபெரும்புதூர் தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம் மற்றும் செங்கல்பட்டு பதிவு மாவட்டம் மற்றும் சுங்குவார்சத்திரம் சார் பதிவு மாவட்டத்தில் அமைந்த பின்வரும் எல்லைகள், **எல்லைகள் : வடக்கு** - 5 அடி பாதை மற்றும் அகத்தியர் தெரு, **தெற்கு** - மீதமுள்ள தெரு, **கிழக்கு** - 3 அடி பாதை, **மேற்கு** - சடகோபன் அவர்களின் நிலம். மொத்த பரப்பு 2834 சதுர அடி மற்றும் இதில் கட்டப்பட்ட ஒரு ஆர்சிசி மேற்கூரை வீட்டு கட்டிடம் மற்றும் அதன் அனைத்து உதிபாகங்கள் இதர.

வீடு மற்றும் வீடு சைட் சொத்து மற்றும் அதனை சார்ந்த அனைத்து பகுதிகளும், பரப்பளவு 2340 சதுர அடி, புஞ்சை பழைய சர்வே எண். 11/7ஏ1ஏ, புதிய ச.எண். 11/7ஏ, பட்டா எண். 528-ன்படி துணை பிரிவு ச.எண். 11/15-க்குட்பட்ட ராமசாமி கவுண்டர் தெரு, சென்னாவரம் கிராமம், வந்தவாசி தாலுகா, திருவண்ணாமலை மாவட்டம் மற்றும் செய்யார் பதிவு மாவட்டம் மற்றும் வந்தவாசி சார் பதிவு மாவட்டத்தில் அமைந்த பின்வரும் எல்லைகள், **எல்லைகள் : வடக்கு** - செல்வராஜ் வீடு, **தெற்கு** - ராஜேந்திரன் விற்ற காலி மனை, **கிழக்கு** - ராமச்சந்திரன் வகையாறா காலி மனை, **மேற்கு** - ராமசாமி கவுண்டர் தெரு. **அளவுகள்** கிழக்கிலிருந்து மேற்கு வடக்கு பக்கம் - 59 அடி, கிழக்கிலிருந்து மேற்கு தெற்கு பக்கம் - 58 அடி, வடக்கிலிருந்து தெற்கு கிழக்கு பக்கம் - 40 அடி, வடக்கிலிருந்து தெற்கு மேற்கு பக்கம் - 40 அடி. மொத்த பரப்பு 2340 சதுர அடி, மற்றும் இதில் கட்டப்பட்ட ஆர்சிசி மேற்கூரை வீட்டு கட்டிடம் மற்றும் அதன் அனைத்து உதிரிபாகங்கள் இதர.

7	1) M/S NELLAI TRADERS, 2) ராமராஜ் யோகேஷ், 3) ராமராஜ் புனிதா 4) சேர்மபாண்டியநாடார் ராமராஜ் LAN – UGTHITH0000031226	கோரிக்கை அறிவிப்பு நாள்: 16.06.2026 அறிவிப்பு தொகை: ரூ.80,60,299.00/- (ரூபாய் எண்பது இலட்சத்து அறுபதாயிரத்து இருநூற்றி தொண்ணூற்றி ஒன்பது மட்டும்) 08.06.2026 தேதியில்

பாதுகாப்பு சொத்து(கள்) விவரம்:- அயிட்டம் எண்.1 - மனை எண்.15-ன் நிலம் மற்றும் கட்டிடம் மற்றும் அதனை சார்ந்த அனைத்து பகுதிகளும், "ஸ்ரீ ஐயப்பா நகர் அனெக்ஸ்" திருவேற்காடு கிராமம், பூந்தமல்லி தாலுகா, திருவள்ளூர் மாவட்டத்தில் அமைந்தது, பரப்பளவு 1200 சதுர அடி நிலம், பழைய சர்வே எண். 171/1, பட்டா எண். 9151, பட்டாவின்படி புதிய சர்வே எண். 171/7, குன்றத்தூர் சார்-பதிவு மாவட்டம் மற்றும் தென் சென்னை பதிவு மாவட்டத்திற்குட்பட்டது எல்லைகள் பின்வருமாறு. **எல்லைகள்: வடக்கில்:** மனை எண்.14-ன் மீதமுள்ள சொத்து, **தெற்கில் :** மனை எண்.16,